# BSNL ஊழியர்சங்கம்

## தமிழ்மாநிலம்

**சுற்றறிக்கைஎண்:159** **தேதி:-29.07.2014**

# எழுச்சியுடன் நடைபெற்ற குடந்தை மாவட்ட மாநாடு

அன்பார்ந்த தோழர்களே,

நமது BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது குடந்தை மாவட்ட மாநாடு, TNTCWU மாவட்ட மாநாட்டுடன் இணைந்த மாநாடாக மயிலாடுதுறையில் 25.07.2014 அன்று இராமச்சந்திரா திருமண மண்டபத்தில் BSNL ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் ரா.பக்கிரிநாதன் மற்றும் TNTCWU மாவட்ட தலைவர் தோழர் R.சீனிவாசன் ஆகியோர் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது.

மயிலாடுதுறையின் மூத்த தோழர் T.மகேந்திரன் அவர்கள் TNTCWU சங்க கொடியினையும், 23 வயதே நிரம்பிய ஒப்பந்த ஊழியர் தோழர் E.ரூபன் அன்புராஜ் அவர்கள் நமது BSNL ஊழியர் சங்கக் கொடியினையும் விண்ணதிரும் கோஷங்களுக்கு இடையே கம்பீரமாக ஏற்றி வைத்தனர்.

மயிலாடுதுறை கிளைச் சங்க செயலாளர் தோழர் N.சௌந்தர்ராஜன் வந்திருந்த அனைவரையும் வரவேற்க, தோழர் T.பாலமுருகன் அவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார். பின்னர் TNTCWU சங்கத்தின் மாநில செயலாலர் தோழர் C,.வினோத் குமார் மாநாட்டை துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். அதற்கு பின் நடைபெற்ற சேவைக் கருத்தரங்கில் மாவட்ட செயலாளர் தோழர் M.குருசாமி முன் வைத்த அறிக்கையின் மீது திரு M.ஹாஜா அலாவூதீன் DGM, திரு R.ராஜேஸ்வரன் AGM, ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா சேவை தொடர்பாக நமது சங்கத்தின் நிலைபாடுகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் M.குருசாமி மற்றும் TNTCWU மாவட்ட செயலாளர் தோழர் A.நித்தியானந்தம் ஆகியோர் முன்வைத்த செயல்பாட்டு அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர்கள் முன்வைத்த வரவு செலவு அறிக்கையினையும் சார்பாளர்களின் விவாதத்திற்கு பின் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

BSNL ஊழியர் சங்கத்தின் மாநில உதவி செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், TEPU மாவட்ட செயலாளர் தோழர் T.ஜெயராமன், தோழர் தா.ராயர் COORDINATION COMMITTEE மற்றும் தோழர் T. விஜயன் TNGEA ஆகியோரின் வாழ்த்துரைக்கு பின்னர் அகில இந்திய, மாநில நிலைமைகளை விளக்கி மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா சிறப்புரை ஆற்றினார். இறுதியாக TNTCWU மாநில தலைவர் தோழர் M.முருகையா நிறைவுரை ஆற்றினார்.

அதற்கு பின் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் **BSNL ஊழியர் சங்க மாவட்ட தலைவராக தோழர் T.மதியழகன், மாவட்ட செயலாளராக தோழர் M.குருசாமி, மாவட்ட பொருளாளராக தோழர் T.பாலமுருகன்** மற்றும் **TNTCWU சங்க மாவட்ட தலைவராக தோழர் T.பன்னீர்செல்வம், மாவட்ட செயலாளராக தோழர் A.நித்தியானந்தம், மாவட்ட பொருளாளராக தோழர் பாலாஜி** உள்ளிட்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர்களின் பணி சிறக்க தமிழ் மாநில சங்கம் மனதார வாழ்த்துகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

S. Chellappa

**(S.செல்லப்பா)**